நிதி நிலை அறிக்கை **2013–2014**
மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் பதிலுரை

**28–3–2013**
**––**

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களேவணக்கம்,

உள்ளத்தில் பாசம் வைத்து, உயிர் கொடுக்கும் தாயைப் போல, இதயத்தில் நேசம் வைத்து, எளியோரை வாழ வைக்கும், தர்மத்தாய் மாண்புமிகு அம்மா அவர்கள் !

கண்ணுக்குள் கனிவை வைத்து , கருணை மழை பொழிகின்ற, கடவுளின் வடிவம் போல் தமிழ் மண்ணின் மேல் உயிரை வைத்து தமிழர்களை உயர வைக்கும் தங்கத் தாய் மாண்புமிகு அம்மா அவர்கள் !

கல்லுக்குள் தேரை வைத்து காப்பாற்றும் கடவுளைப் போல் சொல்லுக்குள் உண்மை வைத்து தமிழகத்தை காக்கின்ற தங்கத் தாரகை மாண்புமிகு அம்மா அவர்கள் !

நெஞ்சுக்குள் ஈரம் வைத்து அன்பைப் பொழிந்த அன்னை தெரசா போல் எண்ணத்தில் கருணை வைத்து ஏழைகளைக் கரை சேர்க்கும் காவல் தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்கள் !

கல்லுக்குள் மறைந்திருக்கும் கலைநயத்தை உளி கொண்டு வெளிக் கொணரும் சி ற்பியைப்போல் தமிழகத்துப் பெருமையெல்லாம் தனி வடிவாய் செதுக்கிக் காட்டும் தங்கத் தலைவி மாண்புமிகு அம்மா அவர்கள் !

எங்கள் இதயதெய்வம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் பொற்பாதக் கமலங்களை வணங்கி எனது பதிலுரையை தொடங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ,தமிழக மக்களின் ஒட்டு மொத்தஅன்பையும், ஆதரவையும் பெற்று மூன்றாம் முறையாக ஆட்சிப் பொறுப்பேற்ற பின்னர்,மாற்றம் தந்த மக்களுக்கு ஏற்றம் தந்திட தமிழகத்தை புது யுகத்திற்கு அழைத்துச் செல்லும் புரட்சி சிந்தனைகளோடுபுத்துலகம் படைக்கின்ற புதுமை செயல் திட்டங்களாக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களால் வடிவமைத்துத் தரப்பட்ட நிதிநிலை அறிக்கைகளை –

**2011** ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் **4**ஆம் நாள், தமிழக வரலாற்றில் ஒரு இலட்சம் கோடியை தாண்டிய முதல் பட்ஜெட்டாக, ரூபாய் **1,02,476 கோடி** மதிப்பீடு கொண்ட முதல் நிதி நிலை அறிக்கையையும், 2012 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 26 ஆம் நாள், ரூபாய் **1,21,667 கோடி** மதிப்பீடு கொண்ட இரண்டாம் நிதி நிலை அறிக்கையையும், இந்த அவை முன்னர் தாக்கல் செய்தோம்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றும் வகையிலும், தமிழகத்தின் மேம்பாட்டுக்கென மாண்புமிகு அம்மா அவர்களின் சீரிய சிந்தனையில் உருவான சிறப்புத் திட்டங்களை செயலாக்கும் வகையிலும், மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள்தம்முடைய நிர்வாக

அறிவாற்றலோடும் ,நிலைத்த செயலாற்றலோடும் தொலைநோக்குப் பார்வையோடும் வழங்கிய அறிவுரைகளையும் வழி காட்டுதல்களையும் ஏற்று உருவாக்கப்பட்ட இந்த நிதிநிலை அறிக்கைகள் தமிழ்நாட்டை முதன்மை மாநிலமாக உருவாக்கிட வழி அமைத்துக் கொடுத்தன.

அதே வழியில், தற்போது மூன்றாம் முறைாக, மாண்புமிகு அம்மா அவர்களது அரசின் சீர்மையின் சிகரமாக, சிறப்பின் சின்னமாக, செம்மையின் வடிவமாக, 2013 ஆம் ஆண்டு, மார்ச் திங்கள் 21 ஆம் நாளன்று, ரூபாய் **1,41,518 கோடி** மதிப்பீடு கொண்ட, நிதி நிலை அறிக்கையை, இந்த மாமன்றத்தில் தாக்கல் செய்துள்ளோம்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசிகளுடன், இந்த அவையில் சமர்ப்பிக்கப்பட்ட இந்த நிதிநிலை அறிக்கை, நம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் கருணைக்கரங்கள், ஏழை, எளிய மக்களை காக்கும் கரங்கள், தமிழகத்திற்கு மேலும், மேலும் வளம் சேர்க்கும் கரங்கள், தமிழகத்தின் உரிமைகளை நிலைநாட்டும் கரங்கள், என்பதை நி ரூபிக்கும் நிதி நிலை அறிக்கையாக, திகழ்ந்து கொண்டிருக்கிறது.

மாண்புமிகு அம்மா அவர்களின் அந்தக் கருணைக்கரங்கள் , அள்ளி அள்ளி கொடுக்கின்ற கரங்களாக, தீய சக்திகளால் வருகின்ற ஆபத்தை தடுக்கின்ற கரங்களாக, மைனாரிட்டி திமுக ஆட்சியின் வேதனையால் கலங்கி நின்றவர்களின் கண்ணீரைத் துடைக்கின்ற கரங்களாக, விளங்கிக்கொண்டிருக்கிறது என்பதை இந்த நிதி நிலை அறிக்கை நாட்டு மக்களுக்கு விளக்கிக் கொண்டிருக்கிறது !

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின்ஆட்சியை குறை சொல்பவர்களுக்கும் கூட குறைவைக்காத நிதி நிலை அறிக்கை விமர்சனம் செய்பவர்களுக்கும் கூட விமோசனம் தருகின்ற நிதி நிலை அறிக்கை என்று நல்ல மனம் கொண்டவர்கள் எல்லாம் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள் ..!

இப்படி பாராட்டையும், பெருமையையும் மாண்புமிகு அம்மா அவர்கள் தேடிச் செல்வதுமில்லை. பெருமை பெற வேண்டுமென்பதற்காக எந்தச் செயலையும் செய்வதும் இல்லை.

மாண்புமிகு அம்மா அவர்கள் தனது கடமையை உளப்பூர்வமாக, மனப்பூர்வமாக, சோர்வு என்பதே இல்லாமல், வெற்றி காணும் வரை விடாமுயற்சியோடு மேற்கொள்கிறார்கள்.
அதனால்தான், "ஆக்கம் அதர்வினாய் செல்லும், அசைவிலா
ஊக்கம் உடையான் உழை"
என்று வள்ளுவப் பெருந்தகை எடுத்துக்கூறியதைப் போல் புகழ், பெருமை, ஆக்கம் அனைத்தும் மாண்புமிகு அம்மா அவர்களை தானாகத் தேடி வருகின்றன. மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள், பெறுகின்ற ஒவ்வொரு வெற்றியும், இதனை நிரூபித்துக்கொண்டிருக்கிறது.

இந்த ஆண்டு, தமிழ்நாடு ஒரு திருவிழாவை சந்தித்தது ! அது பொங்கலா, இல்லை ! பொங்கல் கொண்டாடுபவர்களும் கொண்டாடிய, ஒரு திருவிழா ! தீபாவளியா, ரம்ஜானா, கிருஸ்துமஸ்ஸா, ? அந்தத் திருவிழாக்கள் இன்னும் வரவே இல்லை ! வேறு எந்தத் திருவிழா ? மாண்புமிகு அம்மா அவர்களின் தளராத முயற்சியால், அறிவால், ஆற்றலால், மதிநுட்பத்தால் காவேரி நடுவர் மன்ற இறுதித் தீர்ப்பை மத்திய அரசிதழில் வெளிவர வைத்தாரே அந்த நாளே அந்த திருவிழா !

தென்னிந்தியாவின் நெற்களஞ்சியமான தஞ்சை தரணியை , பாலைவனமாக்கிவிட வேண்டுமென்று முயற்சி செய்தது கர்நாடகம். தமிழகத்திலிருந்து சிலர் இதற்கு துணை

நின்றனர். இதனால் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள், நீதியின் துணை கொண்டு, நியாயத்தை மீட்டு, சட்டத்தின் துணை கொண்டு சரித்திரம் படைத்து, காவேரியில் தமிழகத்திற்கு உள்ள உரிமையை நிலை நாட்டினார்கள். காவேரி நடுவர் மன்ற இறுதித் தீர்ப்பை மத்திய அரசிதழில் வெளியிட வைத்தார்கள்.

மாண்புமிகு அம்மா அவர்கள் காவேரிப் பிரச்சினையில் தமிழகத்திற்கு பெற்றுக்கொடுத்த இந்த வெற்றிக்குப் பின்னால், மாண்புமிகு அம்மா அவர்களின் 31 வருட கால போராட்டம் உள்ளது என்பதை யாரும் மறந்து விட முடியாது. மாண்புமிகு அம்மா அவர்கள், தனது உயிரை துச்சமாக மதித்து, உண்ணா நோன்பிருந்து அறப்போராட்டம் நடத்தியதை தமிழக மக்கள்மறந்து விட மாட்டார்கள்.

காவேரிப் பிரச்சனையில் தமிழகத்தின் பக்கம் நியாயம் இருப்பதை உணர்ந்த கர்நாடகம், பிரச்சனையை இழுத்தடிக்க, பேச்சு வார்த்தை என்ற ஆயுதத்தைப் பயன்படுத்தியது. அதிகாரிகள் மட்டத்தில் பேச்சு, பொறியாளர்கள் மட்டத்தில் பேச்சு, அமைச்சர்கள் மட்டத்தில் பேச்சு, முதலமைச்சர்கள் மட்டத்தில் பேச்சு, என்று பேசினார்கள், பேசினார்கள், பேசிக்கொண்டே இருந்தார்கள். கடந்த 23 வருடங்களாக 26 முறை கூடி விவாதித்தார்கள்.

மாண்புமிகு அம்மா அவர்கள் இதை உன்னிப்பாகப் பார்த்தார்கள். காவேரி பிரச்சனையை, பேசித் தீர்க்க முடியாது, தீர்த்து விட்டுதான் பேச வேண்டும் என்று முடிவெடுத்தார்கள். அதனால்தான், சட்டத்தின் துணையை நாடி வெற்றி பெற்றார்கள். காவேரி நடுவர் மன்ற இறுதித் தீர்ப்பை மத்திய அரசிதழில் வெளியிட வைத்து தமிழகத்திற்கு மட்டுமல்ல, தர்மத்திற்கும் வெற்றி தேடித் தந்தார்கள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள்.

<u>வறட்சி நிவாரணம் துயர் துடைப்பு</u> இயற்கை செய்த சூழ்ச்சியாலும், இங்கிருப்போர் சிலர், கர்நாடகத்தின் வழக்கறிஞர்களாக மாறியதன் விளைவாகவும், கர்நாடகம் காவேரியில் தண்ணீர் விட மறுத்ததாலும், ஏற்பட்டுவிட்ட வறட்சியின் காரணமாக, பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க, சென்னை நீங்கலாக மற்ற மாவட்டங்களை வறட்சி பாதித்த மாவட்டங்கள் என்று மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் அறிவித்துள்ளார்கள். அதன் அடிப்படையில் பாதிக்கப்பட்ட விவசாயிகளின் துயர்துடைக்க அதிரடியாக நடவடிக்கையை மேற் கொண்டார்கள். தமிழ்நாடு முழுவதும் நில வரியை ரத்து செய்து அறிவித்தார்கள்.

பயிர் இழப்பை சந்தித்துள்ள காவேரி டெல்டா மாவட்ட விவசாயிகளுக்கு இந்தியாவிலேயே வேறு எந்த மாநில அரசும் தந்திராத வகையில், ஏக்கர் ஒன்றிற்கு 15,000 ரூபாய் வழங்கிட மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டார்கள். காவேரி டெல்டா விவசாயிகளுக்கு மட்டுமல்லாமல், வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள, மாநிலத்தின் பிற பகுதிகளில் உள்ள வேளாண் பெருங்குடி மக்களும் மனம் குளிரும் வண்ணம் அவர்களுக்கும் பல நிவாரண உதவிகளை, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள், விரைவில் அறிவிப்பார்கள், என்று மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, காவேரி பாசனப் பகுதி விவசாயிகளுக்கான பயிர்க் காப்பீட்டுக் கட்டணத்தை மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களது அரசே ஏற்றுக் கொள்ளும் என்று அறிவித்தார்கள்.

இவை மட்டுமல்ல, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ்விவசாய தொழிலாளர்களுக்கான வேலைவாய்ப்பினை 150 நாட்களாக உயர்த்தியது –இத்திட்டத்தில் அளிக்கப்படும்தினக்கூலியை 132 ரூபாயிலிருந்து, 148 ரூபாயாக உயர்த்தியுள்ளது –பெற்ற தண்ணீரை பாதுகாத்து வைக்க15,000 பண்ணைக் குட்டைகள் அமைத்தது –உழவர்களுக்கிடையே விழிப்புணர்வை உருவாக்க இவ்வாண்டுக்கும் உழவர் பெருவிழா நடத்துவது –என அடுக்கடுக்காக அறிவிக்கப்பட்ட திட்டங்களினால் எங்களின் வேதனை தீர்த்த நல்லரசு என்று மாண்புமிகு அம்மா அவர்களது அரசை வேளாண் பெருமக்கள் மனதாரப் பாராட்டி வாழ்த்திக் கொண்டிருக்கிறார்கள்

2013–2014 ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கை கடுமையான பொருளாதார சூழ்நிலையில்தயாரிக்கப்பட்டு இருந்தாலும், பொருளாதார வளர்ச்சியை ஊக்கப்படுத்துவதற்கு பல்வேறு திட்டங்களை உள்ளடக்கியதாகவும், ஏற்கெனவே செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்களுக்கு போதிய நிதியை ஒதுக்கி, பல கட்டமைப்புத் திட்டங்களையும் செயல்படுத்த வழிவகுக்கக் கூடியதாகவும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் வடிவமைக்கப்பட்டு, இம்மாமன்றத்தின் முன் வைத்துள்ளோம்.

மந்தமான பொருளாதார சூழ்நிலையில் முதன்மைத் துறையான விவசாயம், கால்நடை, மீன்வளம் போன்ற துறைகளுக்கு கூடுதல் நிதி ஒதுக்கீடு, உயர் தொழில்நுட்பங்களை விரிவாக்கம் செய்து உற்பத்தித் திறனை அதிகரிக்க பலவழிமுறைகள், சாலைகள் மேம்பாடு, மின் உற்பத்தி போன்ற கட்டமைப்புத் திட்டங்களுக்கு கூடுதல் நிதி என பல புதிய திட்டங்களையும் செயல்படுத்துவதற்கான அறிவிப்புகளுடன், தென் தமிழகத்தை தொழில் துறையில் முன்னேற்ற எடுக்கப்பட உள்ள முயற்சிகள், சமூகக் கட்டமைப்புகளை மேம்படுத்திட கல்வி, சுகாதாரத் துறைகளுக்கு கணிசமான ஒதுக்கீடு என பல்வேறு திட்டங்களை உள்ளடக்கி இந்த நிதி நிலை அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.

<u>திட்டங்கள் :</u> "நோய் போனாலும் சரி ஆள் போனாலும் சரி டாக்டருக்கு குநுநுளு பீஸ் போய் சேர்ந்திடும்" அப்படி ஒரு பழமொழி இருக்கிறது. மைனாரிட்டி திமுக ஆட்சியில் போடப்பட்ட திட்டங்கள் எப்படி ஆனாலும் சரி அவர்களது குடும்பங்களுக்குப் போய் சேர வேண்டியது மட்டும் சரியாகப் போய் சேர்ந்து விடும் !

அப்படிப்பட்ட திட்டங்கள் தான் திரு. கருணாநிதி ஆட்சிக்காலத்தில் போடப்பட்டன மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியிலே போடப்பட்ட திட்டங்கள்தான் உண்மையிலேயே மக்களுக்கு போய் சேருகின்றன !

மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு ஆட்சிப் பொறுப்பேற்ற இந்த இரண்டாண்டு காலத்தில் எண்ணற்ற முன்னோடித் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

கிராமப்புறங்களில் வாழ்ந்துகொண்டிருக்கிற ஏழைகளுக்குள் ஏழைகளாய் இருக்கின்றவர்களின்
குடும்பங்களின் பொருளாதார நிலையை உயர்த்துவதற்கு விலையில்லா கறவைப் பசுக்கள், ஆடுகள் வழங்குவதற்கு 250 கோடி ரூபாய்.–

மாணவச் செல்வங்கள் உலகளாவிய அறிவியல் அறிவினைப் பெறுவதற்கு விலையில்லா மடிக்கணினிகள் வழங்குவதற்கு 1500 கோடி ரூபாய்.–

பெண்கள் நாட்டின் கண்கள் என்று மாண்புமிகு அம்மா அவர்கள் எண்ணுகின்ற காரணத்தினால்குடும்பத்தலைவியாக விளங்குகின்ற தாய்மார்களின் வேலைப் பளுவினை

குறைக்கும் நல்ல எண்ணத்துடன் வழங்கப்படுகின்ற விலையில்லா மிக்சி, கிரைண்டர், மின் விசிறி போன்றவற்றுக்கு 1,500 கோடி ரூபாய்.–

வீடற்ற ஏழைகளுக்கு தரமான, உறுதியான வீடுகள் தர வேண்டுமென்பதற்காக பசுமை வீடுகள் திட்டத்திற்கு 1,080 கோடி ரூபாய்.–

ஏழை எளிய மக்களுக்கு உயர்ந்த மருத்துவ சிகிச்சை வழங்க, மாண்புமிகு முதலமைச்சரின் விரிவாக்கப்பட்ட புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்திற்கு 750 கோடி ரூபாய்.–

ஏழைப் பெண்களின் திருமணம், எந்த நேரத்திலும் காலம் தாழ்த்தப்பட்டுவிடக்கூடாது அல்லது தடைபட்டுவிடக்கூடாது என்பதற்காக பத்தாம் வகுப்பு வரை படித்த ஏழை பெண்களுக்கு திருமண நிதி உதவியாக 25 ஆயிரம் ரூபாய், தாலிக்கு தங்கம் 4 கிராம். பெண்கல்வியை ஊக்குவிக்க வேண்டுமென்பதற்காக பட்டயம் அல்லது பட்டம் பெற்ற பட்டதாரி பெண்களுக்கு திருமண உதவி 50 ஆயிரம் ரூபாய், தாலிக்கு 4 கிராம் தங்கம் இத்திட்டத்திற்காக 750 கோடி ரூபாய். –

டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி நினைவு பேறு கால உதவிக்கு 720 கோடி ரூபாய்.– முதியோர், ஆதரவற்றோர், ஆதரவற்ற விதவைகள் ஆகியோரின் சமூக பாதுகாப்பினை உறுதி செய்வத ற்கா சமூக பாதுகாப்பு உதவித் திட்டங்களுக்கு 3456 கோடி ரூபாய்.– ரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் சரித்திரத் திட்டமாம் சத்துணவுத் திட்டத்திற்கு 1491 கோடி ரூபாய்.– குழந்தைகளை நல்லமுறையில் பேணி பாதுகாப்பதற்காக ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டத்திற்காக 1358 கோடி ரூபாய்.–

ஆக சமூக நலத் திட்டங்களுக்கென மொத்தம் 43,449.56 கோடி ரூபாய் தாய் உள்ளதோடு மாண்புமிகு அம்மா அவர்கள் இந்த வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கி, அனைத்து சமூக நலன்களையும் உறுதிப்படுத்தியுள்ள மாநிலமாக மாற்றி, தமிழகத்தினை ஆட்சி செய்துகொண்டிருக்கிறார்கள்.

அதோடு வளர்ச்சித் திட்டங்களுக்கும் போதிய நிதியினைத் தந்திருக்கிறார்கள் மாண்புமிகு அம்மா அவர்கள்.

ஒருங்கிணைந்த நகர்ப்புர மேம்பாட்டுத் திட்டத்திற்கு 750 கோடி ரூபாய்.– சென்னைப் பெருநகர வளர்ச்சித் திட்டத்திற்கு 500 கோடி ரூபாய்.– கிராமப்புறப் பகுதிகளில் குக்கிராம மேம்பாட்டிற்கு 750 கோடி ரூபாய்.– நகர்ப்புர வறுமை ஒழிப்புத் திட்டத்திற்கு 200 கோடி ரூபாய்.– ஒருங்கிணைந்த மலைவாழ் மக்கள் நலத்திட்டத்திற்கு 50 கோடி ரூபாய்.– மாநில சமச்சீர் வளர் ச்சி நிதியாக 100 கோடி ரூபாய்.– திறன்வளர் பயிற்சிக்கு 100 கோடி ரூபாய்– திடக்கழிவு மேலாண்மைக்கு கிராமப்பகுதிக்கு 150 கோடி ரூபாயும், நகர்ப்புரத்திற்கு 100 கோடி ரூபாயும் சிறப்பு நிதி– இவற்றுக்கு மேலாக கட்டமைப்பு மேம்பாட்டிற்கு 2,000 கோடி ரூபாயும், திட்டத் தயாரிப்பிற்கு 200 கோடி ரூபாயும் என பல திட்டங்களுக்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. –

சாலைகளை மேம்படுத்த உலகவங்கி திட்டம், நபார்டு வங்கியின் கடன் பெற்று நடைமுறைபடுத்த பல திட்டங்கள், ஒருங்கிணைந்த சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்திற்கு 2,032 கோடி ரூபாய், என கணிசமாக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

பல்வேறு முக்கிய துறைகளுக்கான ஒதுக்கீடு இந்த வரவு செலவுத் திட்டத்தில் கணிசமாக உயர்த்தப்பட்டுள்ளது.

காவல் துறைக்கு, 2012–2013 ல் 4,096.73 கோடி ரூபாயாக இருந்த ஒதுக்கீடு, 2013–14–ல் 4,706.17 கோடியாக உயர்வு.

விவசாயத் துறைக்கு , நடப்பாண்டில் 4,829.92 கோடி ரூபாயாக இருந்த ஒதுக்கீடு, வரும் ஆண்டில் 5,189.15 கோடி ரூபாயாக உயர்வு.

சுகாதாரம் மற்றும் குடும்ப நலத் துறைக்கு, நடப்பாண்டில் 6,087.67 கோடி ரூபாயாக இருந்த ஒதுக்கீடு , வரும் ஆண்டில் 6,511.76 கோடி ரூபாயாக உயர்வு.

ஊரக வளர்ச்சித் துறைக்கு, நடப்பாண்டில் 11,057.59 கோடி ரூபாயாக இருந்த ஒதுக்கீடு , வரும் ஆண்டில் 12,410.26 கோடி ரூபாயாக உயர்வு.

பள்ளிக் கல்வித் துறைக்கு, நடப்பாண்டில் 14,915.30 கோடி ரூபாயாக இருந்த ஒதுக்கீடு , வரும் ஆண்டில் 16,965 கோடி ரூபாயாக உயர்வு.

உயர்கல்வித் துறைக்கு , நடப்பாண்டில் 2,511.93 கோடி ரூபாயாக இருந்த ஒதுக்கீடு , வரும் ஆண்டில் 3,224.10 கோடி ரூபாயாக உயர்வு.

நெடுஞ்சாலைத் துறைக்கு, நடப்பாண்டில் 5,615.71 கோடி ரூபாயாக இருந்த ஒதுக்கீடு , வரும் ஆண்டில் 6,452.77 கோடி ரூபாயாக உயர்வு.

நீர்வளத் துறைக்கு, நடப்பாண்டில் 3,009.94 கோடி ரூபாயாக இருந்த ஒதுக்கீடு , வரும் ஆண்டில் 3,314.49 கோடி ரூபாயாக உயர்வு

என பல்வேறு துறைகளுக்கும் நிதி ஒதுக்கீடு கணிசமாக உயர்த்தப்பட்டுள்ளது.

இன்றைய முக்கியப் பிரச்சினை மின்சாரம். மின் உற்பத்தியைப் பெருக்கவும், மின் கடத்தும் கட்டமைப்பை மேம்படுத்தவும், வெளிமாநிலங்களிலிருந்து பெறப்படும் மின்சாரத்தைக் கொண்டுவர வழித்தட அனுமதி பெறுவது முதல், இடைப்பட்ட கால, நீண்டகால அளவில் மின்சாரம் கொள்முதல் செய்ய எடுக்கப்பட்டு வரும் முயற்சிகள், உற்பத்தியை அதிகரிக்க புதிய திட்டங்கள், மரபுசாரா எரிசக்தியை ஊக்குவிக்க, சூரிய எரிசக்தியை பெற எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என மாண்புமிகு அம்மா அவர்களது அரசு எல்லா வழிகளிலும் கடுமையான முயற்சிகளை எடுத்து, மின்பற்றாக்குறையை அகற்ற முயன்று வருகிறது. இதற்காக மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழக நிதி ஆதாரத்தை உறுதிப்படுத்த எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளை மாமன்ற உறுப்பினர்கள் நன்கு அறிவீர்கள்.

2012–2013 ஆம் ஆண்டில் மட்டும் மாண்புமிகு அம்மா அவர்களது அரசு இந்த நிறுவனத்திற்கு அளித்த நிதி 11,242 கோடி ரூபாய். 2013–2014ல் அளிக்க உள்ள நிதி 12,197 கோடி ரூபாய். இது அரசின் வரி வருவாயில் 14.17 சதவீதம் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

இதுவரை, எந்த அரசாலும் இந்த அளவுக்கு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கு நிதி உதவி செய்யப்படவில்லை என்பதையும் இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

மாணவர்கள் – இந்த நாட்டின் வருங்கால மன்னர்கள் என்று பலர் சொன்னார்கள். ஆனால், அவர்கள் மன்னர்கள் ஆவதற்கான அத்தனை திட்டங்களையும் மாண்புமிகு அம்மா அவர்கள் செய்து கொண்டிருக்கிறார்கள்.

இன்று மாணவ, மாணவியருக்கு மாண்புமிகு அம்மா அவர்கள் வாரி, வாரி வழங்கிக் கொண்டிருக்கிறார். சுருக்கமாகச் சொல்ல வேண்டும் என்றால் மாணவ, மாணவிகளை பெற்றெடுப்பதுதான் அவர்களின் அம்மா ! அவர்களை உயர்த்தி விடுவதெல்லாம் நம் இதயதெய்வம் அம்மா ! மாணவர்கள் வீட்டையும் காக்க வேண்டும் நாட்டையும் காக்க வேண்டும் என்று நினைப்பவர் அம்மா ! அதனால்தான் நேற்றைய தினம் சிறப்பு கவன ஈர்ப்புத் தீர்மானத்திலே போராட்டத்தில் ஈடுபட்டுள்ள தமிழ்நாட்டின் எதிர்கால நம்பிக்கை நட்சத்திரங்களாகிய மாணவ, மாணவியர் தங்களுடைய அறப்போராட்டத்தை கைவிட்டு கல்வியில் கவனம் செலுத்தி பெற்றோருக்கும், தமிழ்நாட்டிற்கும் பெருமை சேர்க்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தார் ! அது தாயுள்ளத்தோடு விடுக்கப்பட்ட வேண்டுகோள் !

மாணவ சமுதாயத்தின் மீது மாண்புமிகு அம்மா அவர்கள் வைத்திருக்கும் நம்பிக்கையையும், பாசத்தையும் அவர்கள் என்றைக்கும் மறந்துவிடமாட்டார்கள்.

ஈழத்தமிழர் பிரச்சினை

இலங்கைத் தமிழர் பிரச்சனையிலே மத்திய அரசு மனிதாபிமானமே இல்லாமல் நடந்து கொண்ட போதும், இலங்கையிலே தமிழ் இனம் அழிக்கப்பட்ட போதும் தனது சுய நலத்துக்காக தனது வாரிசுகளின் வளமான வாழ்வுக்காக வாய்மூடிக் கிடந்தவர் கருணாநிதி ! மத்திய அரசிடம் மண்டியிட்டுக் கிடந்தவர் கருணாநிதி !

"காரே களவு போன பின்னால கார் ஷெட்டை பூட்டி வச்சானாம் ஒருத்தன்" அந்த அதிமேதாவியைப் போல இலங்கையிலே தமிழ் இனம் கொன்று குவிக்கப்பட்ட பிறகு மத்திய அரசுக்கு கொடுத்த ஆதரவை வாபஸ் வாங்கியிருக்கிறார் கருணாநிதி.

ஆனால், தனக்காக வாழாமல் தமிழர்களுக்காகவே வாழும் தங்கத் தலைவி இதயதெய்வம் புரட்சித்தலைவி மாண்புமிகு அம்மாஅவர்கள் மூன்றாவது முறையாக முதலமைச்சர் ஆனவுடனே ராஜபக்சே போர்க்குற்றவாளி என்றும், இலங்கைக்கு பொருளாதாரத் தடை விதிக்க வேண்டும் என்றும் தீர்மானத்தை இந்த மன்றத்திலே நிறைவேற்றி வெற்றிச் சாதனை படைத்தார்.

பிரபாகரனின் மகன் பச்சிளம் பாலகன் பாலச்சந்திரன் கொலை செய்யப்பட்டதற்கு கடும் கண்டனம் தெரிவித்தார். தமிழ் மண்ணில் நடைபெறுகின்ற கிரிக்கெட் போட்டிகளில் இலங்கை வீரர்கள் விளையாட அனுமதிக்க மாட்டோம் என்று தமிழ் உணர்வோடு தடை போட்டார் நேற்று இந்த அவையிலே சிறப்பு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வந்தார்

"இலங்கை நாட்டை "நட்பு நாடு" என்று சொல்வதை இந்திய அரசு நிறுத்திக் கொள்ள வேண்டும்"

இப்படி ஒரு தீர்மானத்தை இந்த அவையிலே கொண்டு வருகின்ற துணிச்சல் முதலமைச்சராக இருந்த போது கருணாநிதிக்கு இருந்ததா ? மாண்புமிகு அம்மா அவர்களுக்கு மட்டும்தான் இருக்கிறது !

இலங்கை இனப்போரின் போது நிகழ்த்தப்பட்ட இனப் படுகொலை – போர்க் குற்றங்கள் குறித்து, சுதந்திரமான, நியாயமான சர்வதேச புலன்விசாரணை நடத்திட வேண்டும் என்ற தீர்மானத்தை கருணாநிதி முதலமைச்சராக இருக்கும் போது கொண்டு வந்தாரா ? அவருக்கு அந்த தைரியம்

இருந்ததா ? அந்த தைரியமும் தமிழ்ப் பற்றும் மாண்புமிகு அம்மா அவர்களுக்கு மட்டும்தான் இருக்கிறது !

"தமிழ் ஈழத்திற்காக இலங்கை வாழ் தமிழர்களிடம் இலங்கையிலிருந்து இடம் பெயர்ந்து பிற நாடுகளில் வாழும் தமிழர்களிடமும் பொது வாக்கெடுப்பு நடத்த வேண்டும்; அதற்காக, ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புக் குழுவின் தீர்மானத்தைக் கொண்டு வர நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று தீர்மானம் கொண்டுவர முதலமைச்சராக இருந்த கருணாநிதிக்கு திராணி இருந்ததா ? கருணாநிதிக்கு திராணியும் இல்லை. தனக்கு திராணி இருக்கிறது என்று சொல்லிக் கொள்ளும் சிலர் தற்போது இந்த சபையிலே இல்லை ! மாண்புமிகு அம்மா அவர்களுக்கு ஈடாக இலங்கைத் தமிழர் மீது அக்கறை கொண்ட தலைவர்கள் யாருமே இல்லை!

மத்திய அரசு மக்களின் நலனைப் பற்றி கவலைப்படுவதே இல்லை. பொருளாதார வளர்ச்சியைப் பற்றி அக்கறைப்படுவதே இல்லை... ,எதிர்க்கட்சிகள் ஆட்சி செய்யும் மாநிலங்களை மதிப்பதே இல்லை... நியாயமாகக் கொடுக்க வேண்டிய உரிமைகளையும் கொடுப்பதே இல்லை... என்பதெல்லாம் மத்திய அரசின் நிதி நிலை அறிக்கையில் தெளிவாகத் தெரிகிறது.

"மக்கள் நலம், மக்கள் நலம் என்றே சொல்லுவார் தம் மக்கள் நலம் ஒன்றே தான் மனதில் கொள்ளுவார்" என்று புரட்சித்தலைவர் எம்ஜிஆர் அவர்கள் ஒரு திரைப்படத்தில் பாடினாரே அப்படிப்பட்ட சுயநலவாதிகள் மத்திய அரசில் பங்கு பெற்றிருந்த போது தாக்கல் செய்யப்பட்ட நிதிநிலை அறிக்கை அந்த லட்சணத்தில் தான் இருக்கும் !

ஆனால், இதயதெய்வம் அம்மா அவர்களின் அரசு மக்கள் நலனைப் பற்றிக் கவலைப்படுகிற அரசு ! பொருளாதார வளர்ச்சியைப் பற்றி அக்கறை படுகிற அரசு ! அதனால் தான், மாண்புமிகு அம்மா அவர்கள் மத்திய அரசு எத்தனை தடைகள் ஏற்படுத்தினாலும் அதையெல்லாம் உடைத்தெறிந்து, தமிழ்நாட்டை தலைசிறந்த மாநிலமாக மாற்றுவதற்கு உழைத்துக் கொண்டிருக்கிறார்கள்!

திமுக ஆட்சியில் சிதைந்து போன சட்டம் ஒழுங்கு அம்மா அவர்களின் ஆட்சியில் சீர்செய்யப்பட்டது ..! தேவையான வசதிகளை காவல் துறைக்கு ஏற்படுத்திக் கொடுத்து காவலர்களின் எண்ணிக்கை கணிசமாக உயர்த்தப்பட்டது. இந்தியாவிலேயே அமைதியோடும், நிம்மதியோடும் பெண்கள் பயமில்லாமல் வாழ்வதற்கு ஏற்ற மாநிலம் தமிழ்நாடு தான் என்ற பெருமை தமிழகத்திற்கு கிடைக்க காரணம் மாண்புமிகு அம்மா அவர்கள்தான்..!

காலிப் பணியிடங்களை நிரப்ப விரைவான நடவடிக்கைகள் எடுத்ததையும், இந்த நிதி ஆண்டில் இரண்டு இலட்சம் வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கும் அறிவிப்பையும் பலன் அடைந்தவர்களும் பலன் அடைய இருப்பவர்களும் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள் மக்களுக்காக பாடு படாதவர்கள் மட்டும் படாதபாடு பட்டுக் கொண்டிருக்கிறார்கள்

கிராமப்புற வறுமையை ஒழிப்பதற்காக மாநில கிராமபுற வாழ்வாதார இயக்கம் படிப்படியாக மாநிலம் முழுவதும் செயல்படுத்தப்படும் என்ற அறிவிப்பு கிராமங்களில் வசிப்போரை மகிழ் ச்சியடைய வைத்திருக்கிறது.

இளைஞர்கள் எல்லாம் எங்கள் பக்கம் தான் இளைஞர்களின் ஆதரவு எங்களுக்குத்தான் இளைஞர்கள் எங்களிடம் தான் இருக்கிறார்கள் என்று சிலர் சொன்னார்கள்... சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்... உண்மையில் அப்படிச் சொல்பவர் 60 ஐக் கொண்டாடிய இளைஞர்! அவருக்குப் பின் இருப்பவர்களும் 60 ஐ எட்டிப்பிடிக்கின்ற இளைஞர்கள் தான்!

ஆனால்... உண்மையிலேயே இளைஞர்கள் இருப்பது மாண்புமிகு அம்மா அவர்களின் பக்கம் தான்!

காரணம்...இளைஞர்களின் வளர்ச்சியைப் பற்றி அவர்களின் எதிர்காலத்தைப் பற்றி நினைப்பவர்... அக்கறைப்படுபவர்... அதற்காக திட்டங்கள் வகுப்பவர் மாண்புமிகு அம்மா அவர்கள்தான்.! இளைஞர்களுடைய திறமைகளை ஒருமுகப்படுத்த... உற்பத்தி ஆற்றலை உயர்த்த... அதிக வருவாய் தரக்கூடிய பணிகளை மேற்கொள்வதற்காக அவர்களுடைய திறன் வளர் பயிற்சி அளிப்பதற்காக 75 கோடி ரூபாய் வாரி வழங்கிய மாண்புமிகு அம்மா அவர்கள் அதனை இந்த நிதி ஆண்டில் 100 கோடியாக உயர்த்தியிருப்பது மாண்புமிகு அம்மா அவர்களின் உயர்ந்த உள்ளத்திற்கு உதாரணம் என்று இளைஞர்கள் எழுச்சியோடு சொல்கிறார்கள்!

வடிவமைக்கப்பட்ட திறன் பயிற்சியை அளிக்க 8 கோடி ரூபாய் ஒதுக்கியதற்கும் சுய வேலை வாய்ப்புகளை அளித்திடுவதற்கான பயிற்சி அளிக்க 5 கோடி ரூபாய் ஒதுக்கியதற்கும் இளைஞர்கள், இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களுக்கு நன்றி சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்! இளைஞர்களின் இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்கள் என்று அவர்கள் பூரித்துப் போயிருக்கிறார்கள்!

அடுத்த பத்தாண்டுகளில் 15 லட்சம் கோடி ரூபாய் மொத்த முதலீடுகள் பெறுவதை தொலைநோக்குத் திட்டம் 2023 இலக்காகக் கொண்டுள்ளதையும், இந்த நிதியாண்டில் கட்டமைப்பு மேம்பாட்டு நிதிக்காக 2000 கோடி ரூபாயும், திட்ட வடிவமைப்புக்காக 200 கோடி ரூபாயும், நிதி ஒதுக்கப்பட்டுள்ளதை தொலைநோக்குத்திட்டம் 2023–ன் அருமை தெரிந்தவர்கள் அளவில்லாமல் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

வேளாண்துறை செழித்து வளர வேண்டும், அதில் ஈடுபட்டவர்களின் இல்லங்களில் எல்லாம் மகிழ்ச்சி நிறைய வேண்டும், என்று நினைக்கின்ற முதல்வராக மாண்புமிகு அம்மா அவர்கள் இருக்கிறார்கள் அதனால்தான்... யாராலும் அழிக்க முடியாத புகழோடு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் இருக்கிறார்கள் என்று வேளாண் பெருமக்கள் பெருமிதத்தோடு பாராட்டுகிறார்கள்...

“ நல்ல செயலை விதையுங்கள், நல்ல பழக்கம் உருவாகும். நல்ல பழக்கத்தை விதையுங்கள், நல்ல குணம் உருவாகும். நல்ல குணத்தை விதையுங்கள், நல்ல எதிர்காலம் உருவாகும்’’– என்று போர்டுமேன் என்ற அறிஞன் சொன்னான்.

அந்த அறிஞன் சொன்னதைத்தான் மாண்புமிகு அம்மா அவர்கள் செய்து கொண்டிருக்கிறார்கள்.

விவசாயிகள் நிலையான வருவாய் ஈட்டுவதற்கு கால்நடை வளர்ப்பும் காரணமாக இருக்கின்றது. அதனால்தான் கால்நடை பராமரிப்புத்துறைக்கு 2013–2014 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் 1082.64 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது தீவனப் பெருக்கதிற்கான நிதி 25 கோடியாக உயர்த்தப்பட்டிருக்கிறது. கால்நடை மருத்துவத்துறை கட்டமைப்பை வலுப்படுத்த 235 கோடி ரூபாய் கால்நடை மருத்துவமனைகளுக்கு கட்டிடங்கள் அமைக்க 115 கோடி ரூபாய் கால்நடை தீவன உற்பத்தி தொழிற்சாலையை புனரமைக்க 14 கோடி ரூபாய். இப்படி அடுக்கடுக்கான அறிவிப்புகள்.

பிறரிடம் அன்பு காட்டுவதில் பெண்கள்தான் சிறப்பானவர்கள்.. உலகத்தில் அன்பைப் பரப்புவதற்காகவே கடவுள் பெண்களைப் படைத்தான் என்று சொல்வார்கள் மனிதர்களிடம் மட்டுமல்ல,

கால்நடைகளிடமும் கூட அன்பு காட்டும் கருணை மனத்தோடு கடவுள் மாண்புமிகு அம்மா அவர்களைப் படைத்திருக்கிறான்.

“ஒருநாள் போவார் ஒருநாள் வருவார் ஒவ்வொரு நாளும் துயரம் ஒருசாண் வயிரை வளர்ப்பவன் உயிரை ஊரார் நினைப்பது சுலபம்’’ – என்று மீனவர்களின் வாழ்க்கைப் பற்றி ஒரு திரைப்படத்தில் புரட்சித்தலைவர் பாடினார்.

மீனவர்களின் இந்த துயர நிலையை மாற்றி, இன்று மீனவர்களைக் காப்பாற்றுகின்ற தெய்வமாக –அவர்களை கரை சேர்க்கின்ற காவல்தெய்வமாக – மாண்புமிகு அம்மா அவர்கள் விளங்கிக் கொண்டிருக்கிறார்.

நிஜக் கண்ணீர் வடிக்கும் மீனவர்களுக்காக நீலிக் கண்ணீர் வடித்தது முந்தைய திமுக அரசும், அவர்கள் பங்கு பெற்றிருந்த மத்திய அரசும்! ஆனால், மீனவர்களுக்கு ஒரு இன்னல் என்றால் சிங்கள கடற்படையினரால் ஒரு ஆபத்து என்றால் மின்னல் வேகத்தில் அதைத் தடுக்கின்ற தாயாக மீனவர்களை மீட்கின்ற தாயாக மாண்புமிகு அம்மா அவர்கள் விளங்கிக் கொண்டிருக்கிறார்.

இலங்கை கடற்படையினரால் துன்புறுத்தப்படும் தமிழக மீனவர்களுக்காக கருணாநிதி அடிக்கடி அறிக்கை விடுகிறார். தமிழ்நாட்டிற்குச் சொந்தமாக இருந்த கச்சத்தீவை இலங்கைக்கு தாரை வார்த்தவரே கருணாநிதிதான்! தமிழக மீனவர்கள் இன்றைக்குப் படுகின்ற
அத்தனை துன்பங்களுக்கும் காரணமே அதுதான்!

"கொலை செய்தவனே மலர் வளையம் வைத்து கண்ணீர் சிந்துவது போல" துரோகம் செய்வதையும் செய்துவிட்டு தமிழக மீனவர்களுக்காக நீலிக் கண்ணீர் வடித்துக் கொண்டிருக்கிறார்! தனது குடும்பங்கள் வளமாக இருப்பதற்காக சேது சமுத்திரத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்று போராடிய கருணாநிதி – மத்திய அரசை வலியுறுத்திய கருணாநிதி – கச்சத் தீவை மீட்பதற்காக மத்திய அரசிடம் போராடினாரா? வலியுறுத்தினாரா? தன் குடும்பம் வளம் பெற நினைத்த கருணாநிதி மீனவர் குடும்பங்கள் நலம் பெற நினைத்தாரா?...

ஆனால், மீனவர்களுக்காக மத்திய அரசோடு வாதாடி, போராடி, குரல் கொடுக்கின்ற மாண்புமிகு அம்மா அவர்கள் கச்சத் தீவையும் மீட்டுத் தருவேன் என்று இந்த மன்றத்திலே சூளுரைத்திருக்கிறார்! வராத காவேரியையே வரவைத்த மாண்புமிகு அம்மா அவர்கள் க ச்சத்தீவை மீட்க மாட்டாரா? மீட்டுத் தருவார் மாண்புமிகு அம்மா அவர்கள் என்ற நம்பிக்கை மீனவர்களுக்கு மட்டுமல்ல, தமிழக மக்கள் அனைவருக்கும் இருக்கிறது! மாண்புமிகு அம்மா அவர்களுக்கு மீனவர்களின் மன வலியும் தெரியும் கச்சத்தீவை மீட்பதற்கான வழியும் தெரியும்.

மாண்புமிகு அம்மா அவர்கள் மாதந்தோறும் தருகிற 20 கிலோ விலையில்லா அரிசியால் லட்சக்கணக்கான குடும்பங்களின் வயிறு நிறைந்திருக்கிறது. துவரம்பருப்பு, உளுந்தம் பருப்பு, பாமாயில் ஆகியவற்றையும் மானிய விலையில் வழங்குவதில் தாய்மார்களின் மனதும் நிறைந்திருக்கிறது. இந்த திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட தொகை 4900 கோடி ரூபாய்!

இதைப்பற்றி மக்கள் என்ன நினைக்கிறார்கள்? மத்தியில் ஆட்சி செய்வது மக்களை ஏமா ற்றுகிற கை.. தமிழ்நாட்டில் ஆட்சி செய்வது மக்களுக்கு அன்னமிட்ட கை என்று ஏழைக் குடும்பங்கள் எல்லாம் குதூகலித்துக் கொண்டிருக்கின்றன!

மத்தியிலே இருக்கும் கை ஏமாற்றவும் செய்கிறது! பெட்ரோல், டீசல் விலையை அடிக்கடி ஏற்றவும் செய்கிறது! நம்பி ஓட்டுப் போட்டவர்களை எல்லாம் ஒழித்துக் கட்டும் வேலையை மத்திய அரசு செய்து வருகிறது! ஆனால், ஓட்டுப் போட்டவர்களை எல்லாம் உயர்த்துகிற வேலையை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு செய்து வருகிறது!

கடந்த திமுக ஆட்சியில் சொந்த பந்தங்களை பாதுகாக்க பாடுபட்டார்களே அன்றி சுற்றுச் சூழலை பாதுகாக்க பாடுபடவில்லை..! வாரிசுகளை வளர்க்க பாடுபட்டார்களே தவிர வனங்களை வளர்க்க பாடுபடவில்லை! நாட்டைப் பற்றியே கவலைப்படாதவர்கள் காட்டைப் பற்றியா கவலைப்படுவார்கள்?

ஆனால் , மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு சுற்றுச் சூழலைப் பாதுகாப்பதற்கும் வனங்களைப் பாதுகாப்பதற்கும் இயற்கை வளங்களை வளர்ப்பதற்கும் இந்த நிதி நிலை அறிக்கையில் தாயுள்ளத்தோடு தாராளமாக நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறது%

உண்மையான பசுமைப் புரட்சியை உருவாக்க மாண்புமிகு அம்மா அவர்களால் மட்டும் தான் முடியும் என்பதையும் இந்த நிதி நிலை அறிக்கை நிரூபித்திருக்கிறது

தொழில் துறை என்பதை தங்களை வளர்க்கும் துறையாகவே திமுக அரசு நினைத்தது! ஆனால், அது நம் மாநிலத்தை வளர்க்கும் துறை என்று நினைப்பவர் மாண்புமிகு அம்மா அவர்கள்! அதனால் தான் அம்மா அவர்கள் முதல்வராக இருக்கும் பொழுதெல்லாம் தொழிற்துறை தலைநிமிர்ந்து நிற்கிறது கருணாநிதி ஆட்சி வரும் பொழுதெல்லாம் அவர்களது கட்சியை போலவே தடுமாறி நிற்கிறது.

தொழிற்சாலையில் இருந்தவைகளை வெறும் இயந்திரங்களாக நினைப்பவர் கருணாநிதி% தமிழ்நாட்டின் இதயங்களாக நினைப்பவர் மாண்புமிகு அம்மா அவர்கள்! வெளி மாநிலத்தில் இருந்தோ வெளிநாட்டில் இருந்தோ வருபவர்கள் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சி காலத்தில் தொழில் தொடங்கினால் அது தமிழ்நாட்டிற்கு வசந்தகாலம் ! கருணாநிதியின் ஆட்சி காலத்தில் தொழில் தொடங்கினால் – அது அவர் குடும்பங்களுக்கு வசந்தகாலம்! – தமிழ்நாட்டிற்கு அது கசந்த காலம்! இது தான் வரலாறு!

மைனாரிட்டி திமுக ஆட்சியில் சீரழிந்து போன துறைகளில் போக்குவரத்துத் துறையும் ஒன்று இப்படிச் சொன்னால் எந்தத் துறைதான் சீராக இருந்தது என்று மக்கள் நம்மை கோபித்துக் கொள்வார்கள்.

சிலருக்கு சக்கரை வியாதி இருக்கும்; சிலருக்கு ரத்தக் கொதிப்பு இருக்கும்; சிலருக்கு கண்பார்வை குறைவாக இருக்கும்; சிலருக்கு காது சரியாகக் கேட்காமல் இருக்கும்; சிலருக்கு இதயம் பாதித்திருக்கும்; சிலருக்கு கிட்னி பழுதடைந்திருக்கும்; நான் சொல்லுகின்ற அத்தனை வியாதிகளும் ஒரே மனிதனுக்கு இருந்தால் எப்படி இருக்கும்? திமுக ஆட்சியிலே தமிழ்நாடு இருந்தது போல் இருக்கும்!

திமுக ஆட்சியிலே எல்லாத்துறைகளுமே சீரழிந்து போயிருந்தன அவற்றை சீர்படுத்தும் வேலைகளை சிறப்பாக செய்து கொண்டிருப்பவர் மாண்புமிகு அம்மா அவர்கள். புதிய புதிய பேருந்துகள் எல்லாம் சாலையை அலங்கரிப்பது மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில்தான் பண்டிகை காலங்களில் சொந்த ஊர்களுக்கு குடும்பத்தோடு சென்று கொண்டாடி மகிழ்ந்துவிட்டு திரும்பி வர தாராளமாக பேருந்துகள் விடப்படுவது தாயின் ஆட்சியில்தான்!

இந்த நிதிநிலை அறிக்கை குறித்து பல்வேறு கருத்துக்களை பத்திரிகைகள் வெளியிட்டுள்ளன. இந்தியன் எக்ஸ்ப்ரெஸ் நாளிதழ் “இந்த வரவுசெலவு திட்டத்தை வரி அல்லாத வளர்ச்சி பட்ஜெட் அதாவது “Tax Free Growth Budget” என்றும், மதுரை–தூத்துக்குடி தொழில் வழிப்பாதை அமைத்தல், சென்னையில் கட்டப்படவுள்ள மேம்பாலங்கள், மீன்வளத் துறைக்கான திட்டங்கள், விலைவாசியை கட்டுப்படுத்த வரவு செலவுத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள திட்டங்கள் போன்றவைகள் பற்றி பாராட்டி கருத்து தெரிவித்துள்ளது.

மேலும் "Prudent Fiscal Management to achieve Target" என்ற கருத்தையும் தெரிவித்துள்ளது. அதே போல் ஹிந்து நாளிதழ் “Revenue surplus Budget again” என்று குறிப்பிட்டு இந்த வரவு செலவு திட்டத்தில் உள்ள பல்வேறு அம்சங்களையும், குறிப்பாக, மாநில நெடுஞ்சாலை மேம்பாட்டு ஆணையத்தை அமைப்பது குறித்தும், மாநில போக்குவரத்துக் கழகங்களின் செயல்பாட்டினை மேம்படுத்துவதற்கு அமைக்கப்படவுள்ள குழு பற்றியும், விவசாயத் துறைக்கு, முன் எப்போதும் இல்லாத ஒதுக்கீடு செய்துள்ளது குறித்தும், குறிப்பிட்டுள்ளதோடு, தென் மாநிலங்களில் தொழில் வளர்ச்சியை ஊக்குவிக்க சிறப்பு உதவிகள் வழங்கவுள்ளதைப் பற்றியும் குறிப்பிட்டு “Big cheer for southern Tamilnadu” என்றும் செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

அதேபோல நிதிநிலை அறிக்கையில் நகர்ப்புர மேம்பாட்டிற்காக செயல்படுத்தப்படும் திட்டங்கள் பற்றியும் குறிப்பாக திடக்கழிவு மேலாண்மைக்கு வழங்கப்பட்டுள்ள முக்கியத்துவம் பற்றியும், உலக வங்கி உதவியுடன் மேற்கொள்ளப்பட உள்ள சாலை மேம்பாட்டுத் திட்டம் பற்றியும் செய்திகளை வெளியிட்டுள்ளது.

அதேபோல் டெகான் க்ரானிகல் நாளிதழ் “Tax Free TN Budget unveils Roadmap for Development” என்ற தலைப்பிலும், Thumps up to no Tax Budget – Boost to Development Infrastructure என்ற தலைப்பிலும், நிதிநிலை அறிக்கையின் பல்வேறு அம்சங்களை பாராட்டி கருத்து தெரிவித்துள்ளது. இதே பத்திரிகை Focus on Road, Power, Special package to revive MSME Enterprises – Boost to growth Projects என்ற கருத்தையும் வெளியிட்டுள்ளது.

Business Standard பத்திரிகை, “Tamil Nadu presents tax-free, revenue surplus budget என்ற தலைப்பிலும் Business Line பத்திரிகை Tamil Nadu Budget: Strong revenue backs infrastructure thrust – Boost to farm infrastructure; no new taxes என்ற தலைப்பிலும் செய்திகளை வெளியிட்டுள்ளன.

இதே போல் பல்வேறு பத்திரிகைகளும் குறிப்பாக தமிழ் நாளேடுகளும் மாண்புமிகு அம்மா அவர்களது அரசின் நிதிநிலை அறிக்கையைப் பாராட்டி கருத்துக்களை வெளியிட்டுள்ளன.

இந்திய தொழில் கூட்டமைப்பு (Confederation of Indian Industry) இந்த வரவு செலவு திட்டத்தை “It is progressive and growth oriented” என்ற கருத்தைப் பதிவு செய்துள்ளது.

குறிப்பாக மின்சார கட்டமைப்பிற்கும், உற்பத்திக்கும், மாண்புமிகு அம்மா அவர்களது அரசு எடுத்துவரும் முயற்சிகளை வெகுவாக பாராட்டியுள்ளது. பொதுவாக, கடுமையான பொருளாதார சூழ்நிலை நிலவிவரும் இத்தருணத்திலும், புதிய வரிகள் எதுவும் இல்லை, ஏற்கெனவே உள்ள வரி விகிதங்களில் எந்த உயர்வும் இல்லை, என்ற மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் முடிவினை பல்வேறு தரப்பினரும் வெகுவாக பாராட்டி கருத்து தெரிவித்துள்ளனர்.

**2013–14** ஆம் ஆண்டிற்கான வரவு–செலவு திட்ட அறிக்கை மீது ஆக்கப்பூர்வமான கருத்து தெரிவித்துள்ள அனைத்து பத்திரிகைகளுக்கும் எனது நன்றியினை தெரிவித்துக்கொள்கிறேன்.
இத்தருணத்தில் ஒரு கருத்தையும் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். பிப்ரவரி மாத இறுதியில், மத்திய அரசால் தாக்கல் செய்யப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் பல்வேறு புதிய வரிகளும் விதிக்கப்பட்டன. செலவினத்தைக் கட்டுப்படுத்துவதற்கு ஏற்கெனவே செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்களுக்கான ஒதுக்கீட்டு நிதியைக் கணிசமாகக் குறைத்து அந்த பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்டது.

ஆனால், இதற்கு நேர்மாறாக கடுமையான பொருளாதார தாக்கம் மாநில அரசின் நிதிநிலையிலும் இருந்தபோதிலும், ஏற்கெனவே மேற்கொள்ளப்பட்ட திட்டங்களுக்கான நிதியொதுக்கத்தைக் குறைக்காமலும் கூடுதல் வரி எதுவும் விதிக்காமலும் இந்த நிதிநிலை அறிக்கையை மாண்புமிகு அம்மா அவர்களது அரசு தாக்கல் செய்துள்ளது என்பதை இம்மாமன்றத்திற்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

குறிப்பாக சொல்ல வேண்டுமென்றால், **2012–2013** ஆம் ஆண்டில் கூட, வரவு செலவு திட்டத்தின் மொத்த மதிப்பீடு (Budget Estimate) **1,20,422** கோடி ரூபாயாக இருந்ததை, திருத்திய வரவு செலவு திட்டத்தில் (Revised Estimate) **1,21,666** கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டு உள்ளதே தவிர வரவு–செலவு திட்ட மதிப்பீட்டை திருத்திய மதிப்பீட்டில் இந்த அரசு குறைக்கவில்லை என்பதையும் இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன்.

எனவே, ஒரு சில மாமன்ற உறுப்பினர்கள் இங்கே பேசும்போது கூட தெரிவித்தார்கள் திட்டங்களுக்கு நிதி ஒதுக்கப்படுகிறது, ஆனால் அவை முழுமை பெறுவது இல்லை என்று. எந்தத் திட்டங்களுக்கும் ஒதுக்கப்படும் நிதி அப்பணியை நிறைவு செய்வதற்கு முழுமையான அளவு ஒதுக்கப்படும் என்பதையும், நிதிப் பற்றாக்குறை என்ற ஒரு சூழ்நிலை திட்ட செயலாக்கத்தில் ஏற்படாது என்பதையும், செயல்படுத்தப்படும் திட்டங்களுக்கான நிதியை குறைக்கின்ற நிலை மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களது தலைமையிலான இந்த அரசுக்கு என்றும் ஏற்படாது என்பதையும் இம்மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

வரவு செலவுத் திட்டத்தின் மீது பல்வேறு தலைவர்களும் தங்கள் கருத்தைத் தெரிவித்துள்ளனர். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் திரு. தா. பாண்டியன் அவர்கள் இந்த வரவு–செலவு திட்டத்தை ‘‘வரிகள் போடாமல் கொண்டுவரப்பட்ட உபரி வரவு–செலவு திட்டம்’’ என்ற கருத்தைத் தெரிவித்துள்ளார்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் திரு ராமகிருஷ்ணன் அவர்கள் புதிய வரிகள் ஏதுமின்றி தாக்கல் செய்யப்பட்டுள்ள பட்ஜெட் என்றும் விலைவாசியைக் கட்டுப்படுத்த எடுக்கப்பட்டுள்ள முயற்சிகள் வரவேற்கத்தக்கவை என்றும் கருத்து தெரிவித்துள்ளார்.

இவர்கள் தவிர திரு சௌந்திரராஜன், திரு ஆறுமுகம், திரு ரா.சரத்குமார், திரு செ.கு. தமிழரசன், திரு பி.வி. கதிரவன், திரு. உ. தனியரசு, டாக்டர் க.கிருஷ்ணசாமி, முனைவர் எம்.எச்.ஜவாஹிருல்லா போன்ற மற்ற தலைவர்களும் தங்களது கருத்துக்களை இம்மாமன்றத்தில் தெரிவித்துள்ளனர். ஒருசில தலைவர்கள் அரசியல் காரணங்களுக்காக வரவு செலவு திட்டம் பற்றிய ஒரு மேம்போக்கான அரசியல் விமர்சனத்தை முன்வைத்துள்ளனர். இந்த அரசைப் பொறுத்தவரை விமர்சனங்கள் எப்படிப்பட்டதாக இருந்தாலும் அவை ஆக்கபூர்வமானதாக இருப்பின் நாங்கள் மனதார வரவேற்கிறோம். ஆனால் அரசியல் காரணங்களுக்காக ஏதோ கருத்து சொல்லவேண்டும் என்பதற்காக, வெளிப்படுத்தப்படும் விமர்சனங்களுக்கு

பதிலளிக்கத் தேவையில்லை என்றே கருதுகிறேன். இந்த நிதிநிலை அறிக்கை மீது அத்தகைய ஆக்கப்பூர்வமான கருத்துக்களைத் தெரிவித்துள்ள அரசியல் தலைவர்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வரவு செலவுத் திட்டத்தில் கடந்த 25–3–2013 முதல் தொடங்கப்பட்ட விவாதத்தில் இதுவரை இம்மாமன்றத்தில் 25 உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களை பதிவு செய்துள்ளனர். அவர்கள் நிதிநிலை அறிக்கையின் வரவேற்கத்தக்க பல்வேறு அம்சங்களைக் குறிப்பிட்டு பாராட்டு தெரிவித்ததோடு சில ஆக்கபூர்வமான விமர்சனங்களையும் எடுத்துரைத்துள்ளனர்.

இந்த அரசு பொறுப்பேற்று, தொடர்ந்து கடந்த மூன்று ஆண்டுகளாக வருவாய் உபரி உள்ள நிதிநிலை அறிக்கையைச் சமர்ப்பித்து வருகிறது. 2010–2011 ஆம் ஆண்டில் வருவாய் பற்றாக்குறை 2,728.69 கோடி ரூபாய். ஆனால் மாண்புமிகு முதலமைச்சர் தலைமையிலான அரசு பொறுப்பேற்ற பின்பு, தமிழக அரசின் நிதிநிலையைச் சீரமைத்து 2011–2012 ஆம் ஆண்டில் 1,364 கோடி ரூபாய் வருவாய் உபரி கொண்டுவரப்பட்டது, 2012–13 ஆம் ஆண்டில் திருத்த மதிப்பீட்டின்படி 451.52 கோடி ரூபாய் வருவாய் உபரி. 2013–2014 ஆம் ஆண்டில் வரவு–செலவு திட்ட மதிப்பீட்டின்படி 644.06 கோடி ரூபாய் வருவாய் உபரியுடன் நிதிநிலை அறிக்கையை இந்த அரசு அளித்துள்ளது. இது போலவே, நிதிப் பற்றாக்குறை, தமிழ்நாடு நிதிநிலை பொறுப்புடைமை சட்டத்தின் வரையறைக்கு உட்பட்டு, மாநில மொத்த உற்பத்தி மதிப்பீட்டில் 3 சதவீதத்திற்குக் கீழ் தொடர்ந்து கட்டுப்படுத்தப்பட்டு வருகிறது. இந்த சதவீதம் 2011–2012 ல் 2.97 ஆக இருந்தது. 2012–2013ல் இது 2.88 ஆக இருக்கும். 2013–2014ல் இந்த அளவு மேலும் குறைக்கப்பட்டு, 2.84 சதவீத அளவில் கட்டுப்படுத்தப்படும். மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் விவேகமான தலைமையில் செயல்பட்டு வரும் இந்த அரசால் வரி வருவாய் முறையாக வசூலிக்கப்பட்டு, அதைத் திறம்பட நிர்வகிப்பதே இதற்கு முக்கிய காரணமாகும்.

இங்கே பேசும்போது கூட மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.வ.வேலு அவர்கள் வரி வருவாய் பற்றி ஒரு கருத்தைத் தெரிவித்தார். நடப்பு ஆண்டின் வரி வருவாய்க்கும், 2013–14 ஆம் ஆண்டு கணிக்கப்பட்டுள்ள வரி வருவாய்க்கும், 17 சதவீதம் வளர்ச்சி விகிதம் காட்டப்பட்டுள்ளது என்றும், தற்போது உள்ள பொருளாதார வளர்ச்சி 4.61 சதவீதம் உள்ள நிலையில், இது எப்படி சாத்தியம் எனவும் ஒரு கேள்வியை எழுப்பினார். 2012–2013 ஆம் ஆண்டில் இந்த மந்தமான பொருளாதார நிலையிலும், நமது மாநிலம் வரிவருவாயில் எட்டியுள்ள வளர்ச்சி, ஜனவரி 2013 இறுதிவரை, 21.8 சதவீதம். இந்நிலையில், அடுத்த ஆண்டிற்கு கணிக்கப்பட்டுள்ள 17 சதவீதம் என்பது மிகச் சரியாக கணிக்கப்பட்ட அளவு என்றும், இது எட்டக்கூடிய கணிப்புதான் என்றும் இங்கே தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

மேலும் 2012–13 ஆம் ஆண்டிற்கு 4.61 சதவீதம் வளர்ச்சி என்பது நிலையான விலைவிகிதத்தின்படி (Constant Prices) கணிக்கப்பட்ட வளர்ச்சி விகிதம். பொருளாதார வளர்ச்சி, வரிவருவாய் போன்றவை, தற்போதைய விலைவிகித மதிப்பீட்டின் அடிப்படையில் (current prices) கணக்கிடப்படுபவை. அதன்அடிப்படையில் உள்ள வளர்ச்சி விகிதம், 2012–2013 ஆம் ஆண்டிற்கு 13.16 சதவீதம் என்பதால், 17 சதவீதம் வரி வருவாய் என்பது சாத்தியமான ஒன்றுதான்.

இது தவிர, பொருளாதார வளர்ச்சி விகிதம் ஒருபுறம் இருந்தாலும், மாநில அரசு வழங்கிவரும் பல்வேறு நலத் திட்ட உதவிகளால் மக்களின் நுகர்வு அளவு சரியாமல் நிலைநிறுத்தப்பட்டுள்ள காரணத்தால், தற்போது வரி வருவாய் தொடர்ந்து சாதகமான நிலையில் உள்ளது என்பதையும் நாம் கருத்தில் கொள்ளவேண்டும். இதன் அடிப்படையில் பார்க்கும் போது, வரிவருவாய் வளர்ச்சி 17 சதவீதம் என்பது எட்டக்கூடிய ஒன்றுதான். மாண்புமிகு உறுப்பினர் அடுத்த ஆண்டு

நிதிநிலை அறிக்கை வெளியிடும்வரை பொறுமைகாத்து, தனது ஐயப்பாட்டினை நீக்கிக் கொள்ள கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.வ.வேலு அவர்கள் பேசும் போது இந்த நிதிநிலை அறிக்கையில் உப்பு, சப்பில்லை என்று குறிப்பிட்டார், இதில் ஆச்சரியப்பட ஏதுமில்லை.

''காமாலைக் கண்ணனுக்கு காண்பதெல்லாம் மஞ்சள்''
''காய்ச்சல் நோய்க்காரனுக்கு சாப்பிட்டதெல்லாம் கசப்பு''

என்று கிராமப்புறங்களில் பழமொழி சொல்வார்கள் திரு. எ.வ. வேலுவுக்கும், அவர் சார்ந்திருக்கும் திமுகவுக்கும் அப்படிப்பட்ட காய்ச்சல் நோய் கண்டிருக்கிறது. இந்தக் காய்ச்சல் சாதாரணக் காய்ச்சல் இல்லை.

அற்ப பதவி சுகத்திற்காக, அன்று, ஈழத் தமிழனைக் காட்டிக் கொடுத்த ஈனச் செயலை எப்படியாவது இன்று, மக்களை மறக்க வைத்துவிட வேண்டும் என்று எண்ணுகிற ''ஏமாற்றுக் காய்ச்சல்!''

எதை வேண்டுமானாலும் இழக்கலாம், ஆனால் அதிகாரத்தை மட்டும் இழந்துவிடக் கூடாது என்று எண்ணும் ''அதிகாரக் காய்ச்சல்!''

பதவி போய்விட்டதே என்று பரிதவித்துப் பதை பதைக்கும் ''பதவிக் காய்ச்சல்!''

மக்கள் குரலுக்கு நான் செவிசாய்க்க மாட்டேன், நான் சொல்வதைத்தான் மக்கள் கேட்க வேண்டும் என்று சொல்கிற ''ஆணவக் காய்ச்சல்!''

அலைக்கற்றை ஊழலை மக்களுக்குத் தெரியாதபடி மறைத்துவிடலாம் எனத் துடிக்கும் ''அமுக்குக் காய்ச்சல்!''

காவேரி நடுவர் மன்ற இறுதித் தீர்ப்பை மாண்புமிகு அம்மா அவர்கள் மத்திய அரசிதழில் வெளியிட வைத்துவிட்டார்களே எனத் தவிக்கும் ''ஆதங்கக் காய்ச்சல்!''

இந்த காய்ச்சலால் தான் வாய் கசந்து போய் உப்பு சப்பு அறியாத நிலைக்கு தள்ளப்பட்டிருக்கிறார் திரு. எ.வ. வேலு.

இந்த காய்ச்சலுக்கு ஒரே ஒரு மருந்துதான் இருக்கிறது. அந்த மருந்தை திமுகவுக்கு கடந்த சட்டமன்ற தேர்தலின் போது மக்களாகிய மருத்துவர்கள் கொடுத்தார்கள். ஆனால் காய்ச்சல் இன்னும் குறைந்த பாடில்லை. எனவே, அந்த மருந்தை எதிர் வரும் நாடாளுமன்றத் தேர்தலில் கொஞ்சம் டோஸை அதிகப்படுத்தி, மீண்டும் கொடுத்து திமுகவை நிரந்தர ஓய்வெடுக்க அனுப்பி வைப்பார்கள், இது உறுதி!

இங்கே பேசிய மாமன்ற உறுப்பினர்கள் குறிப்பாக திரு பாலகிருஷ்ணன், திரு குணசேகரன் போன்றவர்கள், அரசின் கடன் அளவைப் பற்றி குறிப்பிட்டு பேசினார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் இந்த அரசு பொறுப்பேற்றவுடன், மாநில அரசின் கடன் கட்டுப்படுத்தப்படும் என்று தெரிவித்தார்கள். அதன் அடிப்படையில்தான் ஒவ்வொரு ஆண்டும் நமக்கு மத்திய அரசால் அனுமதிக்கப்படும் கடன் அளவை முழுமையாகப் பெற வாய்ப்பு இருந்தும், அதைவிட குறைவான அளவிலேயே, கடன் பெற்று வருகிறோம். 2012–2013 ஆம்

ஆண்டில் கூட நமக்கு அனுமதிக்கப்பட்ட கடன் அளவு 20,716 கோடி ரூபாயாக இருந்தபோதும் மாநில அரசு பெற்ற நிகர பொதுக் கடன் அளவு 15,675 கோடி ரூபாய் மட்டுமே. கடன் பெறாமல், எந்த ஒரு அரசும் நிர்வாகத்தை நடத்த இயலாது. அமெரிக்கா உள்பட மேற்கத்திய நாடுகள் கூட கடன் பெற்றுத்தான் பல கட்டமைப்புத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றன. ஏன், இந்திய அரசும் கூட கணிசமான அளவு கடன் பெற்றுத்தான் கட்டமைப்புத் திட்டங்களை நிறைவேற்றி வருகிறது.

எனவே கடன் பெறுவது என்பது தவறு அல்ல. ஆனால் அவ்வாறு பெறப்படுகின்ற கடன் எந்த அளவில் உள்ளது என்றும், எதற்கு பயன்படுத்தப்படுகிறது என்பதைப் பொறுத்தே இதில் முடிவாக எதையும் கூற முடியும்.

அதாவது பெறும் கடன், நீண்டகால கட்டமைப்புகளுக்கு பயன்படுத்தப்படுகின்றதா என்பதையும், அந்தக் கடன் அளவு அரசால் திரும்பச் செலுத்துகின்ற நிலையில் உள்ளதா என்பதையும் பொறுத்தே கடன் பெறுவது சரியா தவறா என்பதைக் கூற முடியும். கடனைத் திரும்பச் செலுத்தும் நிலையில் அரசு உள்ளதா இல்லையா என்பதை உறுதிபடுத்தும் வகையில்தான் மத்திய நிதிக்குழு, மாநில அரசுகளுக்கான ஒட்டுமொத்தக் கடன் வரம்பை நிர்ணயம் செய்கிறது. இதன்படி, தமிழ்நாட்டிற்கு மத்திய நிதிக் குழு நிர்ணயித்துள்ள கடன் வரம்பு, 2013–2014ஆம் ஆண்டிற்கு மாநில மொத்த உற்பத்தியில் கடன் 25 சதவீதத்திற்குள் இருக்க வேண்டும் என்பதுதான். ஆனால், மாநில அரசு நிதிநிலை அறிக்கையில் சமர்ப்பித்துள்ள விவரத்தின்படி 2013–2014 ஆம் ஆண்டு இறுதியில், இந்த சதவீதம், 19.18 அளவு மட்டுமே இருக்கும். மேலும், இவ்வாறு கடன் பெறும்போது அதனால் ஏற்படுகின்ற வட்டிச் சுமை ஒவ்வொரு ஆண்டும் உயர்ந்து வருவதாக மாண்புமிகு உறுப்பினர் திரு குணசேகரன் அவர்கள் கூட தெரிவித்தார்கள். ஆண்டுதோறும் உயர்ந்துவரும் உற்பத்தி, வரிவருவாய் அடிப்படையில், பெறப்படும் கடன் அளவோ, அதனால் திரும்பச் செலுத்துகின்ற வட்டி அளவோ ஒவ்வொரு ஆண்டும் உயர்வது தவிர்க்க இயலாத ஒன்று. ஆனால், வட்டி அளவு, மாநிலத்தின் வருவாயில் உள்ள சதவீதத்தில் உயர்ந்து வருகிறதா என்பதுதான் கவனிக்கப்பட வேண்டிய ஒன்று. தமிழ்நாட்டைப் பொறுத்தவரை வட்டிச்சுமை வருவாய் வரவில் 10 ஆண்டுகளுக்கு முன்பு, அதாவது 2003–2004ஆம் ஆண்டில் 20.97 சதவீதமாக இருந்தது. 2013–2014 ஆம் ஆண்டில் இது 11.45 சதவீதமாகக் குறைந்துள்ளது. எனவே கடந்த காலங்களை ஒப்பிடும்போது இந்த சதவீதம் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இது தவிர, இந்திய அளவில் குறைவான கடன் சதவீதம் உள்ள மாநிலங்களுள்தமிழ்நாடும் ஒன்று என்பதையும், இங்கே தெரிவித்துக் கொள்கிறேன். எனவே, மாநில அரசு பெற்றுள்ள கடன் சுமையும், செலுத்தப்படுகின்ற வட்டியும், கட்டுப்படுத்தப்பட்ட அளவோடுதான் உள்ளது என்றும், அதை திரும்பச் செலுத்தக் கூடிய வகையில் தமிழகத்தின் நிதிநிலை வலுவாகவே உள்ளது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த மாமன்றத்தில் நடைபெற்ற விவாதத்தில் மாண்புமிகு உறுப்பினர் திருமதி விஜயதரணி அவர்கள் ஒரு கருத்தைத் தெரிவித்துள்ளார். மாண்புமிகு உறுப்பினர் திரு. குணசேகரன் அவர்கள் மேற்கு வங்க மாநிலம் போல் நமது மாநிலமும் கடனை ரத்து செய்வதற்கு மத்திய அரசை வலியுறுத்த வேண்டும் என்ற கருத்தைத் தெரிவித்தார்.

அப்போது திருமதி விஜயதரணி அவர்கள், மேற்குவங்கம், பீகார் போல நமது மாநிலத்தையும் பின்தங்கிய மாநிலமாக அறிவிக்கக் கோரி உதவிகளைப் பெறலாம் என போகாத ஊருக்கு வழி சொல்கிறார்.

இது எவ்வாறு சாத்தியம் என்பதும் எனக்குத் தெரியவில்லை. தமிழகத்திற்குத் தரவேண்டிய நிதியைக் கூட மத்திய அரசு தரவில்லையே என்பதுதான் எங்களது ஆதங்கம்.

மத்திய அரசு தமிழ்நாட்டிற்கு வழங்குகின்ற வரி வருவாயின் பங்கோ, மத்திய திட்டங்களுக்கு வழங்கும் நிதி உதவியோ வேறு மாநிலங்களிலிருந்து நமக்குக் கிடைப்பதில்லை. நமது மாநிலத்தில் வசூலிக்கப்படும் மத்திய வரி வருவாயில் ஒரு பங்குதான் நமக்குக் கிடைக்கிறது. அதன் பெரும்பகுதி பிற மாநில மேம்பாட்டிற்கு மத்திய அரசு பயன்படுத்துகிறது. இதுபற்றி நாங்கள் ஆட்சேபிக்கவில்லை. ஆனால் தமிழகத்திற்கு உரிய நிதியையாவது அவர்கள் தரவேண்டாமா ?

அதைப் பெற்றுத் தர, இங்கே இருக்கக்கூடிய காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த மாமன்ற உறுப்பினர்கள் உதவி புரிவார்களா என்பதுதான் எங்களது கேள்வி.

அவர் மேலும் ஒரு கருத்தைச் சொன்னார் – போன ஐந்தாண்டு கால திட்டத்திற்கு 32,000 கோடி ரூபாயையும், இந்த ஐந்தாண்டுகால திட்டத்திற்கு 85,000 கோடி ரூபாயையும் மத்திய அரசு வழங்கியுள்ளதாகவும் தெரிவித்தார்.

இந்த புள்ளிவிவரங்களை எதன் அடிப்படையில் அவர் தெரிவித்தார் என்பது எனக்குத் தெரியவில்லை. ஆனால் உண்மையான புள்ளி விவரங்களின்படி, ஐந்தாண்டு திட்டங்களுக்கான பெரும்பகுதி நிதி மாநில அரசின் நிதியே.

ஐந்தாண்டுத் திட்டம் என்பது ஆண்டுதோறும் எடுத்துச் செயல்படுத்த வேண்டிய திட்டம் சார்ந்த பணிகளுக்கான மொத்த வரைவுத் திட்டம்தான். இது, ஒவ்வோர் ஆண்டும் ஆண்டுத் திட்டமாக (Annual Plan) ஐந்தாண்டுகளுக்குச் செயல்படுத்தப்படும்.

12வது ஆண்டுத் திட்டம் 2012–2013ல் தொடங்கி 2016–2017 வரை ஐந்தாண்டுகள் செயல்படுத்தப்படும்.

இதற்கு மாநில அரசு நிர்ணயித்துள்ள இலக்கு 2.11 லட்சம் கோடி ரூபாய்.

2012–2013 ஆண்டுத் திட்டத்திற்கு 28,000 கோடி ரூபாயில் மத்திய அரசின் பங்கு 3,473.48 கோடி ரூபாய் மட்டுமே.

அதேபோல், 2013–14 ஆம் ஆண்டு திட்டத்திற்கு 37,000 கோடி ரூபாய் அனுமதிக்கப்பட்டுள்ளது. இந்த 37,000 கோடி ரூபாயில் மத்திய அரசின் நிதி 3,636.18 கோடி ரூபாய் மட்டுமே.

அதாவது 9.83 சதவீதமே மத்திய அரசின் நிதி.

நிகர நிதியை மாநில அரசு தனது வருவாயிலிருந்தும், மாநில அரசு பெறும் கடனிலிருந்தும்தான் பயன்படுத்தப்பட்டு வருகிறது என்பதைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

உண்மை நிலை இவ்வாறு இருக்க, ஐந்தாண்டுகளுக்குரிய திட்டங்களுக்கு முழு நிதியையும் மத்திய அரசே வழங்குவதுபோல உண்மைக்கு மாறான ஒரு செய்தியை திருமதி விஜயதரணி அவர்கள் பதிவு செய்துள்ளார்.

இதே பிரச்சினை குறித்த தவறான கருத்தினை, கடந்த கூட்டத் தொடரின்போதும் திருமதி விஜயதரணி தெரிவித்தார். அப்போது மாண்புமிகு அம்மா அவர்கள், தக்கதொரு விளக்கத்தினை அவருக்குத் தந்தார்கள். அதைச் சரியாகப் புரிந்துகொள்ளாமல் மீண்டும்

தவறான கருத்தினைத் தெரிவித்துள்ளதால், அவருக்கு மீண்டும் தெளிவுபடுத்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

பேரவைத் தலைவர் அவர்களே,

இந்த வரவு–செலவுத் திட்ட அறிக்கை மீதான விவாதங்களில் கலந்துகொண்ட உறுப்பினர்களுக்கு எனது நன்றியை மீண்டும் ஒரு முறை தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு அம்மா அவர்களது அரசைப் பொறுத்தவரை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே தெரிவித்ததைப் போல மக்களுக்காகத்தான் திட்டமே தவிர திட்டங்களுக்காக மக்கள் அல்ல என்ற கருத்தின் அடிப்படையில்தான் எண்ணற்ற திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தி வருகிறோம்.

தமிழகத்தை முதன்மை மாநிலமாக ஆக்க வேண்டும் என்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உன்னத நோக்கத்தை உறுதியாக எட்டுவோம் என மீண்டும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

கூற்றம் இல்லை, ஓர் குற்றம் இலாமையால்,
சீற்றம் இல்லை, தம் சிந்தையின் செம்மையால்,
ஆற்றம் நல் அறம் அல்லது இலாமையால்,
ஏற்றம், அல்லது இழிதகவு இல்லையே

என்று கம்பர் கண்ட கோசல நாட்டின் வளத்தை தமிழ்நாட்டில் உருவாக்க அயராது பாடுபட்டு வரும் தமிழ்நாட்டின் இணையற்ற முதலமைச்சர் மாண்புமிகு அம்மா அவர்கள் அறத்தையே தனது தாரக மந்திரமாகக் கொண்டு செயல்படுவதால், மாண்புமிகு அம்மா அவர்களின் தலைமையில் தமிழ்நாடு மேலும் மேலும் உயர்வையே அடையும் என்பதில் ஐயமில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு அம்மா அவர்களின் சிந்தனையும் செயலும் ஒன்றுதான். அது தமிழகத்தின் முன்னேற்றம்!

மாண்புமிகு அம்மா அவர்களின் பேச்சும், மூச்சும் ஒன்றுதான் அது தமிழர்களின் நல்வாழ்வு!

மாண்புமிகு அம்மா அவர்கள், முதல்வர் ஆகும்போதுதான்
விவசாயிகள் வீட்டில் விளக்கெரிகிறது.

மாண்புமிகு அம்மா அவர்கள், முதல்வர் ஆகும்போதுதான்
நெசவாளிகள் நெஞ்சம் நிறைகிறது.

மாண்புமிகு அம்மா அவர்கள், முதல்வர் ஆகும்போதுதான்
மீனவர்களின் கண்ணீர் மறைந்து போகிறது.

மாண்புமிகு அம்மா அவர்கள், முதல்வர் ஆகும்போதுதான்
மாணவர்களின் மனம் குளிர்ந்து போகிறது.

மாண்புமிகு அம்மா அவர்கள், முதல்வர் ஆகும்போதுதான்
தொழிலாளர்களின் துன்பம் தொலைந்து போகிறது.

மாண்புமிகு அம்மா அவர்கள், முதல்வர் ஆகும்போதுதான்
உழைப்பாளிகளின் வேதனை விலகிப் போகிறது.

மாண்புமிகு அம்மா அவர்கள், முதல்வர் ஆகும்போதுதான்
தீயசக்திகள் அழிக்கப்பட்டு தெய்வ சக்தி வலுப்பெறுகிறது.

மாண்புமிகு அம்மா அவர்கள், முதல்வர் ஆகும்போதுதான்
வேஷதாரிகள் ஒழிக்கப்பட்டு தமிழர்களுக்கு முழு நிம்மதி கிடைக்கிறது.

மாண்புமிகு அம்மா அவர்கள், முதல்வர் ஆகும்போதுதான்
தமிழருக்கு கிடைக்க வேண்டிய உரிமைகள் எல்லாமல்
தவறாமல் கிடைக்கிறது.

மாண்புமிகு அம்மா அவர்கள், முதல்வர் ஆகும்போதுதான்
தமிழகத்தின் உரிமைகள் நிலை நாட்டப்படுகிறது.

மாண்புமிகு அம்மா அவர்கள், முதல்வர் ஆகும்போதுதான்
தமிழ்நாட்டில் அமைதி தவழ்கிறது !
ஆனந்தம் நிலைக்கிறது.!

இன்றைக்குத் தமிழகம் அனுபவிக்கும்
இந்த ஆனந்தத்தை,

தமிழக மக்கள் மட்டுமே பெறுகின்ற
இந்த அனுபவத்தை

இந்திய நாடு முழுமையும், இந்திய மக்கள் அனைவரும், பெற்றிட வேண்டும் என்பதே,
தமிழக மக்கள் ஒவ்வொருவரின் எதிர்பார்ப்பும், விருப்பமும் ஆகும்.

– தமிழக மக்களின் இந்த எண்ணத்தை ஈடேற்றிட
–கழகத் தொண்டர்களின் விருப்பத்தினை நிறைவேற்றிட
–தமிழகத்தின் உரிமைகள் தலை நிமிர்ந்து காக்கப்பட
–இந்திய ஒருமைப்பாடு என்றுமே செழித்தோங்க

பாரத அரசை மாண்புமிகு அம்மா அவர்கள் வழி நடத்த வேண்டும் என்பது காலம் நமக்கு இடுகின்ற கட்டளை.

இந்தக் கனவை நனவாக்க, எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில், புதுச்சேரி உட்பட 40 தொகுதிகளிலும், வெற்றிக்கனி பறித்து , மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்கரங்களில், சமர்ப்பிக்க உறுதி ஏற்போம், என்று கூறி,

மாண்புமிகு அம்மா அவர்களது அரசின் மூன்றாவது நிதி நிலை அறிக்கையை இம்மாமன்றத்தில் அளித்திடும் வாய்ப்பினை அளித்து, அதன் தொடர்ச்சியாக அதன் மீதான விவாதங்களுக்கு பதிலுரை வழங்குகின்ற நல்வாய்ப்பினை எனக்கு நல்கியமைக்கு மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதங்களில் மீண்டும் எனது நன்றியை சமர்ப்பித்து என் பதில் உரையை நிறைவு செய்கிறேன்.

நன்றி, வணக்கம்.

---